# பொதுக்காலம் 12ஆம் வாரம் - ஞாயிறு

# இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இறைஇயேசுவில் அன்பிற்குரியவர்களே, இன்று பொதுக்காலம் 12ம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

நம் வாழ்வின் இன்றைய காலக் கட்டங்களில், பரப்பரப்பான இந்த உலகில், உறங்க நேரம் இல்லாமல் பலர் ஓடி ஓடி உழைத்துக் கொண்டிருக்கின்றனர். அப்படி ஓடி ஓடி, உழைத்து பலர் உடல், மன ரீதியாக பல நோய்களை, மன உளைச்சல்களை பெற்றுக் கொண்டிருக்கின்றனர். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம் தூங்க வேண்டும் என மருத்துவர்கள் கூறியுள்ளனர். அதைச் சரியாக கடைப்பிடிக்கும்போது நம் உடல், மனம் இரண்டுமே புத்துணர்ச்சி பெற்று அடுத்த பணிகளை செய்ய புத்துணர்ச்சியை, உற்சாகத்தை நமக்குக் கொடுக்கும். பலர் தூங்க நேரமில்லாமல் உழைத்துக் கொண்டிருக்க, மற்றும் பலர் தூங்குவதையே தொழிலாகக் கொண்டு, சோம்பேறியாக சுற்றி வருவார்கள். “சோம்பேறிகளே, இன்னும் எவ்வளவு நேரம் படுத்திருப்பீர்கள்? தூக்கத்திலிருந்து எப்போது எழுந்திருப்பீர்கள்? இன்னும் சிறிது நேரம் தூங்குங்கள், இன்னும் சிறிது நேரம் உறங்குங்கள், வறுமை உங்கள் மீது வழிப்பறிக் கள்வரைப்போல் பாயும். ஏழ்மை நிலை உங்களைப் போர்வீரரைப்போல் தாக்கும்” என நீதிமொழிகள் 08ம் அதிகாரம் 06-10 வரை உள்ள இறைவார்த்தைகள் கூறுகிறது. ஆகையால், தூக்கத்தைக் குறைத்து, சோம்பேறித்தனத்தை விட்டொழித்து, நன்கு உழைத்து வாழ்வதுவே நல்லது. தூக்கத்திலிருந்து ஒரு துணை எழுத்தை எடுத்து விட்டால் துக்கமே மிஞ்சும். துக்கம் வராத அளவிற்கு, சரியான நேரங்களில் தூங்கி, உடல், மனம் இரண்டையும் பாதுகாப்போம்.

நம் வாழ்வில் சோதனைகள் என்னும் புயல் தாக்கலாம். இன்னல்கள், இடர்கள் அலையாக எழலாம். கண்ணீர், நிறைந்திருக்கலாம். நம் வாழ்வை அச்சுறுத்தும், இத்தனை இரைச்சல்களையும் கண்டு, மனம் சோர்ந்திடாது, தளர்ந்திடாது, அவற்றையெல்லாம் அடக்கி, அமைதியை ஏற்படுத்தும் இறைவன் நம்மோடு பயணிக்கின்றார் என்ற ஆழமான விசுவாச உணர்வு நம்மிலே வேண்டும்.

“இயேசு தூங்கினார்” என்றால், அவர் எத்தகைய அச்சமும், கலக்கம் கொள்ளவில்லை. ஏனென்றால், தந்தையாகிய இறைவன், நம்மை கைவிடமாட்டார் என்ற ஆழ்ந்த நம்பிக்கை அவரிலே இருந்தது. ஆனால், சீடர்களுக்கு அத்தகைய விசுவாசம் இல்லாமல் போனது. அதனால், இயேசு, சீடர்களுக்குக் விசுவாசத்தை கற்றுக் கொடுக்கின்றார். தானியேல் சிங்கக்

குகையில் தள்ளப்பட்ட போதும், பவுலும், சீலாவும் சிறைக்கூடத்திலிருந்த போதும், எதற்கும் கலங்காமல், இறைவனை முழுமையாக நம்பினர். விடுதலையும் பெற்றனர். அத்தகைய விசுவாசம் நிறைந்த உள்ளத்தை நாமும் பெற்றிட, இத்தெய்வீகத் திருப்பலியில் நம்மையே ஒப்புக் கொடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை: யோபு 38: 1, 8-11

இறைவனுக்குரியவர்களே,

துன்பத்திற்கு காரணம் சொல்ல முடியாது, இது ஏன் வருகிறது என கேட்க முடியாது. ஆனால், இறைவனை நம்பும் போது, அவர் ஞானத்தைக் கொடுப்பார். அப்போது, அதன் வழியாக நாம் இந்த உலகத்தையும், அதன் நிலைகளையும் புரிந்து கொண்டு, ஏற்று வாழ முடியும் என்பதை இன்றைய முதல் வாசகம் எடுத்துரைக்கிறது. குறைவான விசுவாசம் இல்லாமல் உறுதியான ஆழ்ந்த விசுவாசத்துடன் வாழ வரம் வேண்டி, இந்த வாசகத்துக்கு செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை: 2 கொரிந்தியர் 5:14-17

இறைவனுக்குரியவர்களே,

நாம் வாழ்வதும், இயங்குவதும், இருப்பதும் அவரிலே தான். எனவே வெறும் மனித இயல்பினால் தூண்டப்பட்ட வாழ்வை வாழ்வதை காட்டிலும், நமக்காக மரித்து, உயிர்த்தெழுந்த இயேசுவுக்காக வாழ வேண்டும் என்று இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித பவுலடியார் அறிவுறுத்துகிறார். இயேசுவை நம் வாழ்வின் மையமாக கொண்டு வாழ வரம் வேண்டி, இந்த வாசகத்துக்கு செவிமடுப்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

தாயும், தந்தையுமான இறைவா,

உம் பணிக்காய் நீர் தேர்ந்தெடுத்து, அர்ச்சித்திட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், அருட் சகோதரிகள். துறவறத்தார் அனைவரும், தங்கள் பணிவாழ்வில் உமதன்பு வாழ்வை, வார்த்தையாக இல்லாமல் வாழ்வாக பிரதிபலித்து, முன்மாதிரியான சாட்சிய வாழ்வு வாழந்து, மக்களை நல்வழியில் வழிநடத்தி, இறையாட்சியை எங்கும் வளரச் செய்திட, தூய ஆவியின்; ஆற்றலையும், வல்லமையையும் நிறைவாகப் பொழிந்து, காத்திட வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அரணும், கோட்டையுமான இறைவா,

எங்கள் வாழ்வில் வரும் துன்பங்கள், துயரங்கள், சோதனைகளைக் கண்டு, மனம் சோர்ந்து, தளர்ந்து, வாழ்வை முடித்துக் கொள்ளும் கோழைத்தனமான, முட்டாள்தனமான முடிவுகளை எங்கள் மனதிலிருந்து அகற்றி, நீர் எங்களோடு என்றும் உடனிருக்கின்றீர், பயணிக்கின்றீர், எங்கள் வாழ்வை வளமாக்குவீர் என்ற ஆழமான விசுவாசத்தை, நம்பிக்கையை நாங்கள் பெற்று, வாழ்வின் பயணத்தை உம் கரம் பிடித்து, நடந்திடக் கூடிய உறுதியான உள்ளத்தைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

உலகின் ஒளியே இறைவா,

வளர்ந்து வரும் இளைய தலைமுறையினரை உம்மிடம் ஒப்புக் கொடுக்கின்றோம். இந்த உலகம் காட்டும் மாயக் கவர்ச்சியான பணம், பதவி, புகழ், மது, மாது என்ற போதையில் தங்கள் வாழ்வை தொலைத்திடாது. தடம் புரண்டிடாது, உண்மை இறைவன் உம்மை விட்டு விலகி, பாவத்திலே வீழ்ந்திடாது, இருளின் ஆட்சிக்குரிய தவறான செயல்களிலிருந்து விடுபட்டு, ஒளியின் ஆட்சிக்குரிய செயல்களை உணர்ந்து, அதன் வழியில் தங்கள் வாழ்வைத் தொடர்ந்திடக் கூடிய தெளிவான மனதினைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

வாழ்வு வழங்கும் வள்ளலே இறைவா,

அன்று வயது முதிர்ந்த சாரா, அன்னா, எலிசபெத் இவர்களின் கண்ணீரின் வேண்டுதல்களை ஏறெடுத்து, அவர்களுக்கு மக்கட்பேற்றினை அளித்தீரே, இன்று திருமணமாகி பல ஆண்டுகள் கடந்து, குழந்தைச் செல்வத்திற்காக ஏங்கித் தவிக்கும் தம்பதியரின் வேண்டுதல்களை கண்ணோக்கிப் பாரும். அவர்களின் கண்ணீரை கண்ணுற்று, அவர்களுக்கு நல்ல மக்கட்பேற்றினை அளித்து, அவர்கள் அக்குழந்தையை உமக்கும், இச்சமூகத்திற்கும் உகந்தவர்களாக வளர்த்து ஆளாக்கிடக் கூடிய, பொறுப்புள்ள பெற்றோர்களாக வாழந்திட வரமருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

இரக்கத்தின் ஊற்றே இறைவா.

வறுமை, ஏழ்மையினால் துயருறும் மக்களுக்கு, அவர்களின் தேவைகளையறிந்து, உதவிடவும், எங்களிடம் இருப்பதை, இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழவும், விபத்து, ஆபத்துக்களில் சிக்கித் தவிப்பவர்களை கண்டும் காணாததுபோல், “நமக்கேன் வம்பு” என விலகிச் செல்லாமல், நல்ல

சமாரியனைப் போல் உடனிருந்து உதவிடவும், அநீதிகளைக் கண்டு, தட்டிக் கேட்காமல், கோழைத்தனமாக வாழாது, தவற்றினைச் சுட்டிக் காட்டி, நீதியை நிலைநாட்டவும் கூடிய, துணிவு நிறைந்த உள்ளத்தை தந்தருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

Rev. Fr. Amirtha Raj Sundar J., amirsundar@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com